# ஸஹாபாக்களின் சிறப்புகள்

رَضِيَ اللَّهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ

"அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான்,
அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டார்கள்."
- அல்குர்ஆன் 9:100

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 01

# அபூபக்ர் அஸ்ஸித்தீக்

## [ ரழியல்லாஹூ அன்ஹூ ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

தன் நட்பிலும் தன் செல்வத்திலும் எனக்கு மக்களிலேயே பேருதவியாளராக இருப்பவர் அபூ பக்ரேயாவார். என் இறைவனல்லாத வேறெவரையாவது நான் உற்ற நண்பராக ஆக்கிக் கொள்ள விரும்பியிருந்தால் அபூ பக்ர் அவர்களையே ஆக்கிக் கொண்டிருப்பேன்.

ஸஹீஹுல் புஹாரி : 3654

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 02

# உமர் இப்னுல் கத்தாப்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**கத்தாபின் புதல்வரே! என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! ஒரு தெருவில் நீங்கள் (நடந்து) செல்வதை ஷைத்தான் கண்டால், அவன் உங்கள் தெருவை விட்டு வேறொரு தெருவில் தான் செல்வான்.**

ஸஹீஹுல் புஹாரி : 3683

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 03

## உஸ்மான் இப்னு அ.'.ப்பான்

[ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**எவரைக் கண்டு வானவர்கள் வெட்கப்படுகிறார்களோ அவரைக் கண்டு நான் வெட்கப்பட வேண்டாமா!**

ஸஹீஹ் முஸ்லிம் : 6362

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 04

# அலீ இப்னு அபீதாலிப்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :
அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நேசிக்கிற அல்லது அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கின்ற ஒரு மனிதரிடம் நாளை இந்தக் கொடியைத் தரப்போகிறேன். அல்லது அத்தகைய ஒருவர் இக்கொடியைப் பிடித்திருப்பார். அவருக்கு அல்லாஹ் வெற்றியளிப்பான். ஸலமா இப்னுல் அக்வஃ (ரழியல்லாஹு அன்ஹு) கூறினார்: நாங்கள் எதிர்பார்க்காத நிலையில் அலீ (ரழியல்லாஹு அன்ஹு) வந்து எங்களுடன் இருக்கக் கண்டோம். உடனே மக்கள், 'இதோ அலீ அவர்களே!' என்று கூறினர். நபியவர்கள் அலீ (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் கொடியைக் கொடுக்க, அவர்களுக்கு அல்லாஹ் வெற்றியளித்தான்.

ஸஹீஹுல் புஹாரி : 3702

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 05

## ஹதீஜா பின்து ஹுவைலித்

[ ர ழி ய ல் லா ஹூ அ ன் ஹா ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் : உலகின் பெண்களிலேயே (அன்று) சிறந்தவர் மர்யம் ஆவார். (இன்று) உலகப் பெண்களிலேயே சிறந்தவர் ஹதீஜா ஆவார்.

ஸஹீஹுல் புஹாரி : 3815

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 06

## ஆஇஷா பின்து அபீபக்ர்

[ ரழியல்லாஹூ அன்ஹா ]

அம்ர் இப்னுல் ஆஸ் (ரழியல்லாஹுஅன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

**நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் சென்று, ’மக்களிலேயே உங்களுக்கு மிகப் பிரியமானவர் யார்?’ என்று கேட்டேன். அவர்கள், ’ஆஇஷா’ என்று பதிலளித்தார்கள்.**

ஸஹீஹுல் புஹாரி : 3662

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 07

## பாதிமா பின்து முஹம்மத்

[ ரழியல்லாஹு அன்ஹா ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**பாதிமா என்னில் ஒரு பகுதியாவார். எனவே, அவரைக் கோபமூட்டியவர் என்னைக் கோபமூட்டியவராவார்.**

ஸஹீஹுல் புஹாரி : 3714

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 08

## அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்
## [ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் : **அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதுடைய இரு கால்களும் மறுமையில் (மீஸான்) தராசியில் உஹத் மலையை விட மிகப் பாரமாக இருக்கும்.**

முஸ்னத் அஹ்மத் : 3991

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 09

## அப்துல்லாஹ் இப்னு உமர்

[ ரழியல்லாஹு அன்ஹுமா ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**அப்துல்லாஹ் (இப்னு உமர்) ஒரு நல்ல மனிதர் ஆவார்.**

ஸஹீஹுல் புஹாரி : 3741

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 10

## அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்
[ ரழியல்லாஹு அன்ஹுமா ]

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) கூறினார்கள்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்னைத் தம்முடன் அணைத்துக் கொண்டு, 'இறைவா! இவருக்கு வேதத்தைக் கற்றுக் கொடுப்பாயாக' என்று சொன்னார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 7270

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 11

## அபூஉபைதா இப்னுல் ஜர்ராஹ்
## [ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**ஒவ்வொரு சமுதாயத்தாருக்கும் (அவர்களின்) நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் ஒருவர் உண்டு. (என்னுடைய) இந்தச் சமுதாயத்தாரின் நம்பிக்கைக்குரியவர் அபூஉபைதா ஆவார்.**

ஸஹீஹுல் புஹாரி : 7255

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 12

## ஹுதைஃபா இப்னுல் யமான் [ரழியல்லாஹு அன்ஹு]

ஹுதைஃபா இப்னுல் யமான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

**அல்லாஹ்வின் மீதாணையாக! நான், எனக்கும் யுக முடிவு நாளுக்குமிடையே நிகழப்போகும் குழப்பங்கள் குறித்து மக்களிலேயே நன்கு அறிந்தவன் ஆவேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதைக் குறித்து எனக்குச் சிலவற்றை இரகசியமாகச் சொல்லியிருந்ததே அதற்குக் காரணமாகும். மற்றவர்கள் அவற்றை அறிவிக்கவில்லை.**

ஸஹீஹ் முஸ்லிம் : 7444

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 13

# முஆத் இப்னு ஜபல்

[ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**முஆதே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நிச்சயமாக நான் உங்களை நேசிக்கிறேன்.**

அபூதாவூத் : 1522

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 14

# ஸ'.த் இப்னு முஆத்

[ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**ஸஃத் இப்னு முஆத் அவர்களின் இறப்புக்காக அளவற்ற அருளாள(னான இறைவ)னின் அரியணை (அர்ஷ்) அசைந்தது.**

ஸஹீஹ் முஸ்லிம் : 6500

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 15

## ஸ.'.த் இப்னு அபீவக்காஸ்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

### அலீ (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

ஸஃத் இப்னு அபீ வக்காஸ் அவர்கள் தவிர வேறெவருக்கும் இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தம் தாய் தந்தையரை அர்ப்பணிப்பதாகக் கூறியதை நான் கேட்டதில்லை. (ஸஃத் அவர்களிடம்) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், 'அம்பெய்யுங்கள். உங்களுக்கு என் தந்தையும் என் தாயும் அர்ப்பணமாகட்டும்' என்று கூறியதைக் கேட்டேன்.

ஸஹீஹுல் புஹாரி : 6184

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 16

# உபை இப்னு கஃப்

## [ரழியல்லாஹு அன்ஹு]

### அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உபை இப்னு கஃப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம், ‘வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் உங்களுக்கு (குர்ஆனின் 98ஆவது அத்தியாயத்தை) ஓதிக்காட்டும் படி எனக்குக் கட்டளையிட்டான்‘ என்று சொன்னார்கள்.

அதற்கு உபை இப்னு கஃப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், ‘அல்லாஹ் என் பெயரைத் தங்களிடம் குறிப்பிட்டானா?‘ என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ‘(ஆம்) அல்லாஹ் தான் உங்கள் பெயரை என்னிடம் குறிப்பிட்டான்‘என்று பதிலளித்தார்கள். அதைக் கேட்டு உபை இப்னு கஃப் (ரழியல்லாஹு அன்ஹு ) அவர்கள் (மகிழ்ச்சிப் பெருக்கால்) அழத் தொடங்கினார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 6496

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 17

## அபூமூஸா அல்அஷ்அரீ
[ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**அபூ மூஸாவே! (இறைத்தூதர்) தாவூத் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இனிய குரல் உங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.**

ஸஹீஹுல் புஹாரி : 5048

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 18

# ஹாலித் இப்னுல் வலீத்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

(முதலில்) இஸ்லாமியச் சேனையின் கொடியை ஸைத் (தம் கையில்) எடுத்தார். அவர் கொல்லப்பட்டு விட்டார். பிறகு, ஜஃபர் (தம் கையில்) எடுத்தார். அவரும் கொல்லப்பட்டு விட்டார். பிறகு இப்னு ரவாஹா (தம் கையில் கொடியை) எடுத்தார். அவரும் கொல்லப்பட்டு விட்டார். இறுதியில் அக்கொடியை அல்லாஹ்வின் வாட்களில் ஒரு வாள் (ஹாலித் இப்னுல் வலீத்) எடுத்தது. அல்லாஹ் (அவரின் கரத்தில்) முஸ்லிம்களுக்கு வெற்றியை அளித்துவிட்டான்.

ஸ்ஹீஹுல் புஹாரி : 3757

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 19

# உக்காஷா இப்னு மிஹ்ஸன் [ரழியல்லாஹூ அன்ஹூ]

## நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

(விசாரணையின்றி, சுவர்க்கம் செல்லவுள்ள) அவர்கள் யாரெனில், அவர்கள் ஓதிப்பார்க்குமாறு கேட்கமாட்டார்கள். பறவைகளை வைத்து சகுனம் பார்க்க மாட்டார்கள். (நோய்க்காக) சூடிட்டுக் கொள்ளமாட்டார்கள். தம் இறைவனையே சார்ந்திருப்பார்கள்' அப்போது உக்காஷா இப்னு மிஹ்ஸன் (ரழியல்லாஹுஅன்ஹு) எழுந்து, 'அவர்களில் நானும் ஒருவனா? இறைத்தூதர் அவர்களே!' என்று கேட்க, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், 'ஆம்' என்று பதிலளித்தார்கள். மற்றொருவர் எழுந்து நின்று, 'அவர்களில் நானும் ஒருவனா?' என்று கேட்க, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 'இவ்விஷயத்தில் உக்காஷா உம்மை முந்திக்கொண்டுவிட்டார்' என்று கூறினார்கள்.

ஸ்ஹீஹுல் புஹாரி : 5705

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 20

## அபுல் ஆஸ் இப்னுர் ரபீ.‘.

[ ரழியல்லாஹூ அன்ஹூ ]

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

அவர் என்னிடம் பேசினார். (பேசிய படி) வாய்மையுடன் நடந்து கொண்டார். எனக்கு வாக்குறுதியளித்தார், அதை எனக்கு நிறைவேற்றித் தந்தார்.

ஸஹீஹூல் புஹாரி : 3729

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 21

## உஸைத் இப்னு ஹுளைர்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

## உஸைத் இப்னு ஹுளைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

நான் இரவு நேரத்தில் (என் வீட்டில்) 'அல்பகரா' எனும் (2 வது) அத்தியாயத்தை ஓதிக்கொண்டிருந்தேன். என்னுடைய குதிரை எனக்குப் பக்கத்தில் கட்டப்பட்டிருந்தது. திடீரென அந்தக் குதிரை மிகக் கடுமையாக மிரண்டது. உடனே ஓதுவதை நிறுத்திக் கொண்டேன். குதிரை மிகக் கடுமையாக மிரண்டது. உடனே ஓதுவதை நிறுத்தினேன். குதிரை அமைதியாகிவிட்டது. பிறகு ஓதினேன். அப்போது குதிரை (முன் போன்றே) மிரண்டது. நான் ஓதுவதை நிறுத்தினேன். குதிரையும் அமைதியானது. மீண்டும் நான் ஓதியபோது குதிரை மிரண்டது. நான் திரும்பிப் பார்த்தேன் அப்போது என் மகன் யஹ்யா குதிரைக்குப் பக்கத்தில் இருந்தான். அவனை அது (மிதித்துக்) காயப்படுத்திவிடுமோ என்று அஞ்சினேன். எனவே, அவனை (அந்த இடத்திலிருந்து) இழுத்துவிட்டு வானை நோக்கித் தலையைத் தூக்கினேன். அங்கு (விளக்குகள் நிறைந்த மேகம் போன்றதொரு பொருள் வானில் மறைந்தது. அதனால்) அதைக் காணமுடியவில்லை.

காலை நேரமானதுபோது நான் நபியவர்களிடம் நடந்ததைத் தெரிவித்தேன். அவர்கள் என்னிடம் 'இப்னு ஹுளைரே! தொடர்ந்து ஓதியிருக்கலாமே! இப்னு ஹுளைரே! தொடர்ந்து ஓதியிருக்கலாமே! என்று கேட்டார்கள். நான், என் மகன் யஹ்யாவைக் குதிரை மிதித்துவிடுமோ என்று அஞ்சினேன். இறைத்தூதர் அவர்களே! அவன் அதன் பக்கத்தில் இருந்தான். எனவே, நான் தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டு அவன் அருகில் சென்றேன். பிறகு, நான் வானை நெருங்கியபோது அங்கு மேகம் போன்றதொரு பொருளைக் கண்டேன். அதில் விளக்குகள் போன்ற (பிரகாசிக்கும்) பொருள்கள் இருந்தன. உடனே நான் வெளிய வந்(து பார்த்)தபோது அதைக் காணவில்லை' என்று சொன்னேன். நபியவர்கள், 'அது என்னவென்று நீ அறிவாயா?' என்று கேட்டார்கள். நான், 'இல்லை (தெரியாது)' என்று சொன்னேன். நபியவர்கள் 'உன் குரலைக் கேட்டு நெருங்கிவந்த வானவர்கள் தாம் அவர்கள். நீ தொடர்ந்து ஓதிக்கொண்டிருந்திருந்தால் காலையில் மக்களும் அதைப் பார்த்திருப்பார்கள். மக்களைவிட்டும் அது மறைந்திருக்காது' என்று கூறினார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 5018

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 22

## ஹஸ்ஸான் இப்னு ஸாபித்

[ ரழியல்லாஹூ அன்ஹூ ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**(ஹஸ்ஸானே!) இணை வைப்பவர்களைத் தாக்கி வசைக் கவி பாடுங்கள். ஜிப்ரீல் உங்களுடன் (உறுதுணையாக) இருப்பார்.**

ஸஹீஹுல் புஹாரி : 4124

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 23

# ஜுலைபீப்

[ரழியல்லாஹு அன்ஹு]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :
இவர் (எதிரிகளில்) எழுவரைக் கொன்றார். அவர்களும் இவரைக் கொன்றுவிட்டனர். (இதோ) இவர் என்னைச் சேர்ந்தவர் ஆவார். நான் இவரைச் சேர்ந்தவன் ஆவேன். இவர் என்னைச் சேர்ந்தவர் ஆவார். நான் இவரைச் சேர்ந்தவர் ஆவேன்.

ஸஹீஹ் முஸ்லிம் : 6512

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 24

# பிலால் இப்னு ரபாஹ்

## [ரழியல்லாஹூ அன்ஹூ]

## நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**பிலாலே! இஸ்லாத்தில் இணைந்த பின் நீர் செய்த சிறந்த அமல் பற்றிக் கூறும்! ஏனெனில் உம்முடைய செருப்போசையை சுவர்க்கத்தில் கேட்டேன். அதற்கு பிலால் (ரழியல்லாஹூஅன்ஹூ) கூறினார்கள்: இரவிலோ, பகலிலோ நான் வுழூச் செய்தால் அவ்வுழூவின் மூலம் நான் தொழ வேண்டுமென்று நாடியதைத் தொழாமல் இருப்பதில்லை. இதுதான் என்னுடைய செயல்களில் சிறந்த செயல்' என்று விடையளித்தார்கள்.**

ஸஹீஹூல் புஹாரி : 1149

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 25

# அபுத்தஹ்தாஹ்

[ ரழியல்லாஹூ அன்ஹூ ]

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**அபுத்தஹ்தாஹ்வுக்காக சுவர்க்கத்தில் எத்தனையோ பேரீச்சங்குலைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.**

ஸ்ஹீஹ் முஸ்லிம் : 2283

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 26

## ருமைஸா பின்து மில்ஹான்
[ ரழியல்லாஹு அன்ஹா ]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :

**நான் (கனவில்) என்னை சுவர்க்கத்தில் நுழைந்தவனாகக் கண்டேன். அங்கு நான் அபூ தல்ஹா அவர்களின் மனைவி ருமைஸாவுக்கு அருகே இருந்தேன்....**

ஸஹீஹுல் புஹாரி : 3679

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 27

# அம்மார் இப்னு யாஸிர்

[ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**அம்மாரிடம் இரண்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டால் அவற்றில் மிகச் சரியானதையே அவர் தேர்ந்தெடுப்பார்.**

இப்னுமாஜா : 148

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 28

# ஸைனப் பின்து ஜஹ்ஷ்

## [ ரழியல்லாஹு அன்ஹா ]

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) கூறினார்கள் :

(ஒரு முறை) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (தம் துணைவியரான எங்களிடம்), '(என் மரணத்திற்குப்பின்) உங்களில் கை நீளமானவரே என்னிடம் முதலில் வந்து சேருவார்' என்று கூறினார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் துணைவியர் (ஒரு குச்சியை எடுத்து), தங்களில் கை நீளமானவர் யார் என்று அளந்து பார்க்கலாயினர். (உண்மையில்) எங்களில் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களே கை நீளமானவராய் இருந்தார். ஏனெனில், அவர்தான் கைத்தொழில் செய்து, (அதிகமாக) தர்மம் செய்யக்கூடியவராக இருந்தார்.

ஸஹீஹ் முஸ்லிம் : 6470

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 29

# அபூஹுரைரா

## [ரழியல்லாஹு அன்ஹு]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**இறைவா! உன்னுடைய இந்தச் சிறிய அடியார் (அபூஹுரைரா) மீதும் அவருடைய தாயார் மீதும் இறை நம்பிக்கையாளர்களான உன் அடியார்களுக்கு நேசத்தை ஏற்படுத்துவாயாக! இறை நம்பிக்கையாளர்கள் மீது இவர்களுக்கு நேசத்தை ஏற்படுத்துவாயாக!**

ஸஹீஹ் முஸ்லிம் : 6551

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 30

## அப்துல்லாஹ் இப்னு ஸலாம்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

### அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

நான் பூங்காவொன்றில் இருப்பதைப் போன்று (கனவு) கண்டேன். அந்தப் பூங்காவின் நடுவே (இரும்புத்) தூண் இருந்தது. அந்தத் தூணின் மேற்பகுதியில் பிடி ஒன்றும் இருந்தது. அப்போது என்னிடம் 'இதில் ஏறுங்கள்' என்று சொல்லப்பட்டது. நான் 'என்னால் இயலாதே' என்று சொன்னேன். அப்போது என்னிடம் பணியாள் ஒருவர் வந்து என் ஆடையை (பின்னாலிருந்து) உயர்த்திவிட்டார். உடனே நான் (அதில்) ஏறி (அதன் மேற்பகுதியிலிருந்த) பிடியைப் பலமாகப் பற்றிக் கொண்டேன். நான் அதைப் பற்றிய நிலையில் இருக்கும்போதே (உறக்கத்திலிருந்து) விழித்துவிட்டேன். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் இது குறித்து நான் விவரித்தபோது, 'அந்தப் பூங்கா இஸ்லாம் எனும் பூங்காவாகும். அந்த தூண் இஸ்லாம் என்னும் (பலமான) தூணாகும். அந்தப் பிடி (இறை நம்பிக்கையெனும்) பலமான பிடியாகும். (ஆக,) நீங்கள் இறக்கும் வரை இஸ்லாத்தைப் பலமாகப் பற்றியவராகவே இருப்பீர்கள்' என்று அவர்கள் (அந்தக் கனவிற்கான விளக்கத்தைக்) கூறினார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 7014

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 31

# அனஸ் இப்னு மாலிக்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

என் தாயார் (உம்மு சுலைம்) அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், 'இறைத்தூதர் அவர்களே! தங்களின் பணியாளர் அனஸுக்காகப் பிரார்த்தியுங்கள்' என்றார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், 'அல்லாஹ்வே! அனஸின் செல்வத்தையும் குழந்தைகளையும் அதிகமாக்குவாயாக! அவருக்கு நீ வழங்கியுள்ளவற்றில் வளம் சேர்ப்பாயாக!' என்று பிரார்த்தித்தார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 6344

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 32

## அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஹராம்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

### ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

(உஹுதுப் போரின் போது) என் தந்தை, உடல் சிதைக்கப்பட்ட நிலையில் நபியவர்களிடம் கொண்டு வரப்பட்டு அவர்கள் முன்னே வைக்கப்பட்டார். நான் என் தந்தையின் முகத்திலிருந்து (துணியை) விலக்கச் சென்றேன். என் குலத்தார் என்னைத் தடுத்தார்கள். அப்போது ஒப்பாரி வைத்து அழும் பெண் ஒருத்தியின் குரலை நபியவர்கள் கேட்டார்கள். அவர், அம்ர் (ரழியல்லாஹு அன்ஹு ) அவர்களின் மகள் என்றோ – அவர்களின் சகோதரி என்றோ கூறப்பட்டது. அதற்கு நபியவர்கள், 'ஏன் அழுகிறாய்?' நீ அழுதாலும் அழாவிட்டாலும் வானவர்கள் தங்கள் இறக்கைகளை விரித்து அப்துல்லாஹ்வுக்கு நிழல் கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 2816

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 33

# ஸாலிம்

[ ரழியல்லாஹூ அன்ஹூ ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**இப்னு மஸ்ஊத், அபூ ஹுதைஃபாவின் (முன்னாள்) அடிமையான ஸாலிம், உபை இப்னு கஃப் மற்றும் முஆத் இப்னு ஜபல் ஆகிய நான்கு பேரிடமிருந்து குர்ஆனை ஓதக் கற்றுக் கொள்ளுங்கள்.**

ஸஹீஹுல் புஹாரி : 3806

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 34

# ஹஸன் இப்னு அலீ

## [ ரழியல்லாஹு அன்ஹுமா ]

### அபூபக்ரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

(ஒரு முறை) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மிம்பர் மீதிருக்க, அவர்களின் ஒரு பக்கத்தில் ஹஸன் இப்னு அலீ (ரழியல்லாஹு அன்ஹுமா) அமர்ந்திருக்க, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு முறை மக்களை நோக்கியும், மற்றொரு முறை ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை நோக்கியும் (உரை நிகழ்த்திய வண்ணம்), 'இந்த என்னுடைய புதல்வர் (கண்ணியத்திற்குரிய) தலைவராவார். முஸ்லிம்களின் இரண்டு பெரும் கூட்டத்தாரிடையே இவரின் மூலமாக அல்லாஹ் சமாதானம் செய்து வைக்க விரும்புகிறான்' என்று கூறினார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 2704

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 35

## ஹுஸைன் இப்னு அலீ

[ ரழியல்லாஹு அன்ஹுமா ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**(ஹஸன், ஹுஸைன் ஆகிய) இருவரும் உலகின் இரண்டு துளசி மலர்கள் ஆவர்.**

ஸஹீஹுல் புஹாரி : 3753

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 36

# உஸாமா இப்னு ஸைத்

## [ ரழியல்லாஹு அன்ஹுமா ]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :

**அல்லாஹ்வின் மீதாணையாக! அவர் (ஸைத்) தலைமைப் பொறுப்புக்குத் தகுதியுடையவராகவே இருந்தார். மேலும், அவர் மக்களிலேயே எனக்கு மிகவும் விருப்பமானவராக இருந்தார். (அவரின் மகனான) இவர் (உஸாமா) தான் அவருக்குப் பின் எனக்கு மிகவும் பிரியமானவராவார்.**

ஸஹீஹுல் புஹாரி : 3730

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 37

## ஸைத் இப்னு ஹாரிஸா

[ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**அல்லாஹ்வின் மீதாணையாக! அவர் (ஸைத்) தலைமைப் பொறுப்புக்குத் தகுதியுடையவராகவே இருந்தார். மேலும், அவர் மக்களிலேயே எனக்கு மிகவும் விருப்பமானவராக இருந்தார். (அவரின் மகனான) இவர் (உஸாமா) தான் அவருக்குப் பின் எனக்கு மிகவும் பிரியமானவராவார்.**

ஸஹீஹுல் புஹாரி : 3730

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 38

## ஸுபைர் இப்னுல் அவ்வாம்

[ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**ஒவ்வோர் இறைத்தூதருக்கும் ஒரு பிரத்யேக உதவியாளர் உண்டு. என் பிரத்யேக உதவியாளர் ஸுபைர் இப்னுல் அவ்வாம் ஆவார்.**

ஸஹீஹுல் புஹாரி : 3719

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 39

# ஸிமாக் இப்னு ஹரஷா [ரழியல்லாஹு அன்ஹு]

## அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

உஹுதுப் போர் நாளில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வாள் ஒன்றை எடுத்து, 'என்னிடமிருந்து இதைப் பெற்றுக்கொள்பவர் யார்?' என்று கேட்டார்கள். மக்களில் ஒவ்வொருவரும் 'நான், நான்' எனத் தம் கைகளை நீட்டினர். நபியவர்கள், 'இதற்குரிய கடமை(யை நிறைவேற்றும் வாக்குறுதி)யுடன் இதை வாங்கிக்கொள்பவர் யார்?' என்று கேட்டார்கள். மக்கள் அனைவரும் பின்வாங்கி விட்டார்கள். அப்போது அபூதுஜானா ஸிமாக் இப்னு ஹரஷா அவர்கள், 'நான் அதற்குரிய கடமை(யை நிறைவேற்றும் வாக்குறுதி)யுடன் இதை வாங்கிக்கொள்கிறேன்' என்று கூறி, அதைப் பெற்றுச் சென்று, (எதிரணியிலிருந்த) இணைவைப்பாளர்களின் மண்டையைப் பிளந்தார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 6507

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 40

# ஸல்மான் அல்பாரிசீ

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

எங்களிடையே ஸல்மான் அல்பாரிசீ இருந்தார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸல்மான் மீது தம் கரத்தை வைத்தார்கள். பிறகு, கிருத்திகா (ஸுரய்யா) நட்சத்திரக் குழுமத்தின் அருகில் இறைநம்பிக்கை இருந்தாலும் 'சில மனிதர்கள்' அல்லது 'இவர்களில் ஒருவர்' அதனை அடைந்தே தீருவார்' என்று கூறினார்கள்.

ஸஹீஹுல் புஹாரி : 4897

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 41

## அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் [ ரழியல்லாஹு அன்ஹு ]

அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :
ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்னைத் தமது வாகனத்தில் தமக்குப் பின்னால் ஏற்றிக்கொண்டு ஒரு விஷயத்தை இரகசியமாக என்னிடம் சொன்னார்கள். அதை நான் மக்களில் யாரிடமும் சொல்லமாட்டேன்.

ஸஹீஹ் முஸ்லிம் : 6423

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 42

# உம்மு அய்மன்

## [ ரழியல்லாஹு அன்ஹா ]

அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம், ‘நம்மை உம்மு அய்மன் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் அழைத்துச் செல்லுங்கள். அவரை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சந்தித்து வந்ததைப் போன்று நாமும் சந்தித்து வருவோம்‘ என்று கூறினார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 6472

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 43

## ஜரீர் இப்னு அப்தில்லாஹ்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

ஜரீர் இப்னு அப்தில்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

**நான் இஸ்லாத்தை தழுவியதிலிருந்து நான் நபியவர்களைச் சந்திக்க அனுமதி கேட்ட எந்தச் சமயத்திலும்) நபியவர்கள் என்னைத் தடுத்ததில்லை. புன்முறுவலுடன் (சிரித்தவர்களாகவே) அல்லாமல் வேறுவிதமாக அவர்கள் என் முகத்தைப் பார்த்ததில்லை.**

ஸஹீஹுல் புஹாரி : 6089

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 44

## அப்பாஸ் இப்னு அப்தில் முத்தலிப் [ரழியல்லாஹு அன்ஹு]

## அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்படும்போது உமர் (ரழியல்லாஹு அன்ஹு), அப்பாஸ் இப்னு அப்தில் முத்தலிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை (அல்லாஹ்விடம்) மழை கோரிப் பிரார்த்திக்கும்படி கேட்பார்கள். (அத்தகைய சந்தர்ப்பங்களில்) உமர் (ரழியல்லாஹு அன்ஹு), 'இறைவா! நாங்கள் எங்கள் நபி உயிருடன் இருந்த போது) அவர்கள் (உன்னிடம் பிரார்த்தித்ததன்) மூலம் உன்னிடம் நாங்கள் உதவி கோரி வந்தோம். அப்போது (அதை ஏற்று) நீயும் எங்களுக்கு மழை பொழிவித்து வந்தாய். இப்போது எங்கள் நபியின் பெரிய தந்தை (அப்பாஸ் – அவர்கள் உன்னிடம் பிரார்த்திப்பதன்) வாயிலாக உன்னிடம் (மழை பொழியும்படி) கோருகிறோம். எங்களுக்கு மழை பொழிவிப்பாயாக!' என்று கேட்பார்கள். அதன்படியே மக்களுக்கு மழை பொழிவிக்கப்பட்டு வந்தது.

ஸஹீஹுல் புஹாரி : 3710

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 45

## தல்ஹா இப்னு உபைதில்லாஹ்

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

தல்ஹா மற்றும் ஸஃத் (ரழியல்லாஹு அன்ஹுமா) கூறினார்கள் :

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (இணைவைப்பவர்களுடன்) போரிட்ட அந்த (உஹுதுப் போரின்) நாட்களில் அவர்களுடன் எங்கள் இருவரையும் தவிர வேறெவரும் இருக்கவில்லை.

ஸஹீஹுல் புஹாரி : 3722

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 46

# அபூஆமிர் அல்அஷ்அரீ

[ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :

**இறைவா! அபூஆமிர் உபைதுக்கு நீ மன்னிப்பு அளிப்பாயாக! மறுமை நாளில் உன் ‘படைப்பினங்களில்‘ அல்லது ‘மனிதர்களில்‘ பலரையும்விட (தகுதியில்) உயர்ந்தவராக அவரை ஆக்குவாயாக!**

ஸ்ஹீஹ் முஸ்லிம் : 6562

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 47

# அபூசலமா

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**இறைவா! அபூசலமாவை மன்னிப்பாயாக! நல்வழி பெற்றவர்களிடையே அவரது தகுதியை உயர்த்துவாயாக! அவருக்குப் பிறகு எஞ்சியிருப்போருக்கு அவரைவிடச் சிறந்த துணையை வழங்குவாயாக! அகிலத்தின் அதிபதியே! எங்களுக்கும் அவருக்கும் மன்னிப்பு அருள்வாயாக! அவரது மண்ணறையை விசாலமாக்குவாயாக! அதில் அவருக்கு வெளிச்சத்தை ஏற்படுத்துவாயாக!**

ஸ்ஹீஹ் முஸ்லிம் : 2169

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 48

# ஸுஹைப் அர்ரூமி

## [ ரழியல்லாஹு அன்ஹு ]

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் :

**அபூபக்ரே! நீங்கள் (ஸல்மான், பிலால், ஸுஹைப்) அவர்களைக் கோபப்படுத்தியிருப்பீர்கள் போலும்! அவர்களை நீங்கள் கோபப்படுத்தியிருந்தால், உங்கள் இறைவனை நீங்கள் கோபப்படுத்தி விட்டீர்கள்.**

ஸஹீஹ் முஸ்லிம் : 6568

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 49

## அப்துர்ரஹ்மான் இப்னு அவ்.'.ப்
## [ ரழியல்லாஹு அன்ஹு ]

முகைரா இப்னு ஷுஃபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

**மக்கள் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களைத் தொழுவிக்கச் சொல்லி (அவர்களுக்குப் பின்னால் நின்று) தொழுதுகொண்டிருந்தனர். நபியவர்களுக்கு (அந்தத் தொழுகையின்) இரு ரக்அத்களில் ஒரு ரக்அத்தான் கிடைத்தது. எனவே, கிடைத்த அந்த இறுதி ரக்அத்தை மக்களுடன் சேர்ந்து தொழுதார்கள். அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் (தொழுகையை முடிப்பதற்காக) சலாம் கொடுத்ததும் நபியவர்கள் எழுந்து, (எஞ்சிய ஒரு ரக்அத்தைத் தொழுது) தமது தொழுகையை நிறைவு செய்தார்கள்.**

ஸஹீஹ் முஸ்லிம் : 979

ASKY ALQAMY

# ஸஹாபாக்களின் சிறப்புகள் 50

## முஆவியா இப்னு அபீஸுஃப்யான்
## [ ரழியல்லாஹு அன்ஹு ]

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் :

அபூஸுஃப்யான் அவர்கள் நபியவர்களிடம் 'தாங்கள் (என் புதல்வர்) 'முஆவியா'வை தங்களுடைய எழுத்தாளராக ஆக்கிக் கொள்ளுங்கள்' என்றார்கள். அதற்கு நபியவர்கள், 'ஆ(கட்டு)ம்' என்றார்கள்.

ஸஹீஹ் முஸ்லிம் : 6565

ASKY ALQAMY